

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் முப்பொரும் விழா பொதுக்கூட்டம் சீர்காழி சட்டநாதபுரம் ரவுண்டானாவில் நடைபெற்றது. கூட்டத்தில் காக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சீர்காழி மேற்கு ஒன்றியச் செயலாளர் ஏ.ஜி.ஜெ.பிரபாகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், இராம.இளங்கோவன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, பொருளாளர் மகா.அலெக்சாண்டர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் உள்ளனர்.



கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் ஈச்சனாரி ரத்தினம் கலை அறிவியல் கல்லூரியில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாமினை 21.09.2024 அன்று அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்து பணி நியமன ஆணைகளை வழங்கினார். அருகில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அரசு செயலர் கொ.வீரராகவராவ் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திருமதி. எ.சுந்தரவல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி பொள்ளாச்சி நாடளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி.கே.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) திருமதி.ஆ.ஜோதிமணி, இரத்தினம் குழும நிறுவனங்கள் தலைவர் டாக்டர்.மதன். ஏ. செந்தில், கோயம்புத்தூர் தெற்கு மண்டல குழு தலைவர் திருமதி.ர.தனலெட்சுமி, மாவட்ட வேலை வாய்ப்புத் துறை அலுவலர் கருணாகரன், மாநகராட்சி பணிகள் குழு தலைவர் திருமதி.சாந்தி முருகன், ஆகியோர் உள்ளனர்




திருப்பூர் தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் தாராபுரம் ஸ்ரீ கோகுல் மஹாலில் மாவட்ட அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மு.பெ.சாமிநாதன் சிறப்புரையாற்றினார். இதில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.ஈ.பிரகாஷ் உள்பட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக செயல் வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் மணல்மேட்டில்

# கலைஞர் சிலை திறப்பு விழாவிற்கு வருகை தரும் அமைச்சர் உதயநிதிஸ்டாலினுக்கு மாபெரும் வரவேற்பு!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மயிலாடுதுறை செப். 24 - மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து.மகேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கூட்டம் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் பேசினார்.

கூட்டத்தில் மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா. அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், மங்கை எம்.சங்கர், செல்ல சேது.ரவிக்குமார், ஞான.



இமையநாதன், ஏ.ஆர். ராஜா, பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ப.முருகமணி, பஞ்சு.குமார், மலர் விழிதிருமாவளவன், ஏ.ஜி. ஜெ.பிரபாகரன்,

நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், தரங்கம்பாடி பேரூர் கழகச் செயலாளர்கள் என். அண்ணாதுரை, எம்.அன்புச்செழியன், எஸ்.கே.முத்துராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் ஏ.வின்செண்ட், ஜெ.கபிலன், எஸ்.சுவாமிநாதன், ஹர்ஷத், சுபாநெடுஞ்செழியன், எம்.பி.கென்னடி, ஒன்றியக் குழு தலைவர்கள் வி.ஜெயபிரகாஷ், கே.மகேந் திரன், மணல்மேடு பேரூராட்சி தலைவர் கண்மணி அறிவுவடிவழகன், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் இரா.மனோகரன், வி.எஸ். பிரபாகரன், இரா.முருகன், இரா.தன்ராஜ்மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.சுரேஷ், என்.மதியழகன், ஜுவானந்தம், கோபி, பிரபாகர், மலைக் கோயில் பிரபாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

சட்ட மன்ற தேர்தலில் நின்ற 13 முறையும் வென்று, 5 முறை முதல்வராகி தமிழ் மக்களுக்கும், தமிழுக்கும் பாதுகாவலராகவலராகவும் , மகளிர் சுய உதவிக்குழு உருவாக்கியும், பெண்களுக்கு சொத்தில்பங்கு, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை தந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வரும் 26ம் தேதி அன்று மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் மணல்மேட்டில் வைக்கப்பட்டுள்ள கலைஞர் முழு திருஉருவ சிலையை திறந்து வைக்க வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட எல்லையான திருவாடுதுறையில் 5000த்திற்கும் மேற்பட் கழகத்தினர் கலந்து கொள்ள செய்து மாபெரும் வரவேற்பு வழங்கிடுவது என்றும், அதைத் தொடர்ந்து நடைபெறும் சிலை திறப்பு விழாவை சிறப்பாக நடத்திடுவது என்றும் , மாவட்ட எல்லை வரவேற்பு விழா மற்றும் சிலை திறப்பு விழாவில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர பேரூர் பகுதிகளில் இருந்து அதிக அளவில் கழகத்தினர் கலந்து கொள்ள செய்திட வேண்டும் என்றும்,

தி.மு.கழகம் தோன்றி 75 ம் ஆண்டை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் முப்பொரும் விழாவை பொதுக்கூட்டம், பட்டிமன்றம், நலத்திட்ட உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தி முப்பொரும் விழாவை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்றும் இதற்காக ஏற்பாடுகளை அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் செய்திட வேண்டும் என்றும், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டத்தை நடத்தியும், அதைத் தொடர்ந்து கிளை, வார்டுகள் தோறும் பொது உறுப்பினர்கள் கூட்டத்தை சிறப்பாக நடத்திட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகளுக்கு நன்றியையும், வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதோடு ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை, வார்டுகளில் கூட்டம் நடத்தி அதன் மினிட் நோட்டை தலைமைக்கு அனுப்பி வைத்திட மாவட்ட கழகத்திடம் ஒப்படைத்த ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களுக்கும் நன்றியை தெரிவித்து கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பாரத ஸ்டேட் வங்கியின் – முன்னாள்

# தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டமைப்பின் கூட்டம்!

## தஞ்சையில் எஸ்.பி.இராமன் தலைமையில் நடந்தது!

தஞ்சை, செப். 24- பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தொழிற்சங்க தலைவர்கள் கூட்டமைப்பின் எட்டாவது பொதுக்குழு கூட்டம் தஞ்சாவூர் அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்க மாளிகை, சரோஜ் நினைவகத்தில் நடந்தது. எட்டாவது பொதுக்குழு கூட்டத்துக்கு அமைப்பின்தலைவர் எஸ்.பி. இராமன் தலைமை வகித்தார். துணைத்தலைவர் டி.வி. சந்திரசேகரன், துணைச் செயலாளர் எம். முருகையா, ஸ்டேட் பேங்க் ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் டி.சிங்காரவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். வருகை தந்த அனைவரையும் நிர்வா கக் குழு உறுப்பினர் எம். ரகுநாதன் வரவேற்றார். வேலூர் ஆர். லோகநாதன் நன்றியுரை நிகழ்த்தினார். பிறகு நாட்டின் நலன், சமுதாய நலன், வங்கி ஓய்வூதியர் நலன் ஆகியவை குறித்த கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பாரத ஸ்டேட் பேங்க் ஓய்வூதியர்கள் ஓய்வு பெறும் போது பெறும் கம்யூட்டேஷன் தொகையை பத்து ஆண்டுகளுக்கு மட்டுமே பிடித்தம் செய்ய வேண்டும். 15 ஆண்டு பிடித்தம் செய்யும் நடைமுறையில் ஒவ்வொரு ஓய்வூதியரிடம் இருந்தும் ரூபாய் 827000 கூடுதலாக பிடித்தம் செய்வது மிகவும் தவறான செயலாக இருக்கும். கணக்கின் துல்லியத்துக்கு பெயர் பெற்ற நமது பாரத ஸ்டேட் வங்கி 10 வருடங்களுக்கு மட்டுமே பிடித்தம் செய்யும் நடை முறையை தாமதமின்றி உடனே நடை முறைப் படுத்துவதோடு கூடுதலாக பிடித்தம் செய்த தொகையை 8.5 சத விகித வட்டியுடன் ஓய்வூதியர்களுக்கு வழங்க முன் வேண்டும் என AFCCoM வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

1995 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்ற ப் பட்ட வங்கி ஓய்வூதியர் பென்ஷன் சீரமைப்பு (PENSION UPDATION) குறித்த சட்டத்தை தாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும். ஓய்வூதிய சீரமைப்பை பெறாமல் ஏறத்தாழ 1,50,000 ஓய்வூதியர்கள் கடந்த முப்பது வருடங்களில் மரணமடைந்துள்ளனர். ஒன்றிய அரசு ஓய்வூதியர்களுக்கும் மாநில அரசு ஓய்வூதியர்களுக்கும் ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியா, நபார்டு வங்கி ஆகியவற்றின் ஓய்வூதியர்களுக்கும் வழங்கப்படுவதைப் போல, ஊதிய உயர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகும் எல்லா தருணங்களிலும் 7 லட்சம் வங்கி ஊழியர்களுக்கும் ஓய்வூதியத்தை சீரமைத்து உயர்த்த தாமதமின்றி ஒன்றிய அரசு முன்வரவேண்டும்.

வங்கி ஓய்வூதியர்களின் ஹெல்த் இன்சூரன்ஸ் பிரிமியம் பொதுத்துறை வங்கி நிர்வாகங்களே ஏற்க வேண்டும் ஐந்து லட்சம் ரூபாய் வரை இலவச மருத்துவ சிகிச்சைக்கு வழி செய்யும் ஒன்றிய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை AFCCOM மனதார வரவேற்கிறது. அதே வேளையில் 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து மூத்த குடி மக்களுக்கும் இத்திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும்.

தமிழகத்தின் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் ஆதரவற்ற முதியோர்களுக்கான இல்லம் அமைக்க தமிழக அரசு முன்வரவேண்டும்

தனியார் இன்சூரன்ஸ் நிறுவனங்களுக்கு ஆதரவாக ஒன்றிய அரசு முன்மொழிய உத்தேசித்துள்ள இன்சூரன்ஸ் சட்ட திருத்த மசோதாவை உடனே கைவிடுவதோடு நான்கு பொதுத்துறை பொதுக்காப்பீட்டு நிறுவனங்களை ஒன்றாக இணைக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் வங்கி மருந்தகங்களை நிறுவ (BANK DISPENSARIES) பாரத ஸ்டேட் வங்கி தாமதமின்றி முன்வரவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பங்கேற்றோர் பொதுக்குழு கூட்டத்தில் உதவி பொருளாளர் வீ பூமி நாதன், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் திருவாரூர் என். பாண்டுரெங்கன், கோவை எம். ரகுநாதன், பாண்டிச்சேரி எஸ். கருணாகரன், வேலூர் ஆர். லோகநாதன், மதுரை பரவை எஸ். பாலசுப்பிரமணியன், ஒரத்தநாடு ஊழியர் சங்க முன்னாள் செயலாளர் வி. சம்பத், செயலாளர் எம். கே. மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்ட

# கலை - இலக்கிய - பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்!

## எழில்மாறன் செல்வேந்திரன் சிறப்புரை!

புதுக்கோட்டை, செப். - 24 - புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 22.9.2024 காலை 10.30 மணக்கு புதுக்கோட்டை மாவட்ட திமுக அலுவலகம் பெரியண்ணன் மாளிகையில் உள்ள கீரை தமிழ் செல்வன் அவை கூடத்தில் மாநில துணைச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் எழில்மாறன் செல்வேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் இரா.மேகநாதன் அனைவரையும் வரவேற்று பேசினார். மாவட்ட தலைவர் அஸ்ரப் அலி, தெற்கு மாவட்ட துணைத் தலைவர் பாபு ஜான், வடக்கு மாவட்ட துணைத் தலைவர் கி.சுப்பிரமணியன்,

துணை அமைப்பாளர்கள் , கந்தர்வகோட்டை முருகையா, முத்து முகமது, இளையராஜா, , ஆக்காட்டி ஆறுமுகம், சின்னையா, லோகநாதன், ராமச்சந்திரன், பிர கதம்மாள் ராஜேந்திரன் மற்றும் மேலவிடுதி ஆறுமுகம், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

முடிவில்புதுக்கோட்டை வடக்கு மாவட்ட அமைப்பாளர் செந்தாமரை பாலு நன்றி கூறினார். கூட்டத்தில் 2026ல் நடைபெற இருக்கின்ற சட்டமன்ற தேர்தலில் புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு சார்பில் தீவிரமாக பணியாற்றி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் பம்பரமாக சுழன்று பணியாற்றி வெற்றியை தேடித் தருவதென தீர்மானிக்கப்பட்டது.

## சேலம் மத்திய மாவட்டம் – மொழிபோர்த் தியாகி

# பி.ஏ.ராமலிங்கம் மறைவு!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அஞ்சலி!

சேலம், செப். 24 - சேலம் மத்திய மாவட்ட கிச்சிப் பாளையத்தைச் சேர்ந்த மொழி போர்த் தியாகி பி. ஏ ராமலிங்கம் ( வயது 85) உடல் நலிவுற்ற நிலையில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.



தகவல் அறிந்து அன்னாரின் உடலுக்கு மாவட்ட கழக செயலாளர் இரா . இராஜேந்திரன் எம்.எல்.ஏ. மாநகர துணைசெயலாளர். வி.கணேசன், பகுதி செயலாளர். கே.ஜெய். கோட்டச் செயலாளர்கள். ஜி. வெங்கடேசன். சத்யன் உட்பட ஏராளமான கழகத் தொண்டர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்,



கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி சின்னசேலம் வடக்கு ஒன்றியத்தில் ரூபாய் 5.36 கோடி மதிப்பில் 153 பேருக்கு கலைஞரின் கனவு இல்லம் கட்டும் திட்ட பயனாளிகளுக்கு உத்தரவு நகலை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ வழங்கினார்,அருகில் வடக்கு ஒன்றிய கழக செயலாளர்,ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் அன்புமணி மாறன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பயனாளிகள்,கழக நிர்வாகிகள் உள்பட பலர் உள்ளனர்.

## கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க பொறியாளர் அணிக்கு

# மாநகர, ஒன்றிய, நகர,பகுதி, பேரூர் கழகங்களுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கு மாநகர,ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பொறுப்புகளுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ள கழகத் தோழர்கள் கீழ்க்கண்ட வழிமுறைகளின் படி விண்ணப்பிக்க வேண்டும்

1.விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு / பட்டய படிப்பு நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்.

2.விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த பகுதியின் வாக்காளராக இருத்தல் அவசியம்.

3.ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் எனும் அளவுக்கு மிகாமல் பொறுப்புகள் நியமிக்கப்படுகின்றனர்.

4.பெண் பொறியியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5.விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள QR CODE வழியே பொறியாளர் அணியின் போர்ட்டல் வழியே மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

6.விண்ணபிக்கப்பட்ட விண்ணபத்தாரர்களை நேரில் அழைத்து நேர்முகத் தேர்வு நடைபெறும்.

ஆகவே மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் மாவட்ட பொறியாளர் அணிநிர்வாகிகள் மேற்கண்ட விதிமுறைகளின் படி விண்ணப்பங்களை இணைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.



கலை. இலக்கிய. பகுத்தறிவுப் பேரவை புதுக்கோட்டை வடக்கு மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாநில துணைச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் எழில்மாறன் செல்வேந்திரன் தலைமையில் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகம் பெரியண்ணன் மாளிகையில் உள்ள கீரை தமிழ்ச் செல்வன் அவைக் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட அமைப்பாளர் செந்தாமரை பாலு, மாவட்ட தலைவர் அஸ்ரப் அலி, துணைத் தலைவர் சி.சுப்ரமணியன், துணை அமைப்பாளர்கள் கந்தர்வகோட்டை முருகையா, முத்து முகமது, இளையராஜா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.